அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை:06/2014

எனது இலக்கம்:- EST/8/ALLOW/03/121
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

2014.03.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**விரிவாக்கற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்ற களப்பணி அலுவலர்களுக்கான படிகள்**

அடிமட்டத்திலுள்ள விரிவாக்கற் சேவைகளை வலுவூட்டுவதற்கென அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் – 2014 இற்கமைய விவசாய விரிவாக்கம், விலங்கு மருத்துவம், நீர்ப்பாசனம் மற்றும் வனசீவராசிகள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் களப்பணி அலுவலர்களை ஊக்குவிப்பதற்கு 2014 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் மாதாந்தப் படியொன்று செலுத்தப்படல் வேண்டும்.

02. அதற்கிணங்க, தங்களின் அமைச்சு/ மாகாண சபையின் கீழுள்ள அரசாங்க நிறுவனங்களில் விரிவாக்கற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும், இச் சுற்றறிக்கையின் இணைப்பு I மற்றும் இணைப்பு II என்பவற்றில் குறிப்பிடப்படும் அலுவலர்களுக்காக 2014 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து அமுலுக்குவரும்வண்ணம் ரூபா. 300/- கொண்ட மாதாந்தப் படிக் கொடுப்பனவானது இத்தால் அனுமதிக்கப்படுகின்றது.

03. இச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு